# ஔவையார் பாடல்களில் உயிரியல் செய்திகள்

*முனைவர் மு.ரா. மஜிதா பர்வின்*
உதவிப்பேராசிரியர், முதுகலை மற்றும் தமிழாய்வு மையம்
ஏ.பி.சி.மகாலட்சுமி மகளிர் கல்லூரி, தூத்துக்குடி
https://doi.org/10.5281/zenodo.15526581

**முன்னுரை**

*சங்ககாலப் பெண்பாற் புலவர்கள் வரிசையில் உயர்வான நிலையில் வைத்துப் போற்றப்படுபவர் ஔவையார் ஆவார். ஔவையாரின் படைப்புகளை தமிழிலக்கிய வரலாற்றில் வைத்து நோக்கும்போது ஔவை என்ற பெயரில் மூவர் இருந்தமைக்கான தரவுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. அவர்களுள் சங்ககாலத்தில் வாழ்ந்த அதியமானின் நண்பராக இருந்த ஔவையார் குறித்து இக்கட்டுரை அமைகிறது. ஔவையின் படைப்புகள் ஒரு கடல் எனில் அதில் ஒரு சிறுதுளியாக, அவர் படைப்புகளில் இடம் பெற்றுள்ள உயிரியல் செய்திகளைப் பற்றி இக்கட்டுரை ஆராய்கிறது.*

**அறிவியல் செய்திகள்**

*ஔவையார் காதலும், வீரமும் குறித்து மட்டும் பேசவில்லை. அறிவியல் சார்ந்து உயிரியல் சார்ந்த பல செய்திகளை தனது பாடல்களின் வாயிலாக எடுத்துரைத்துள்ளார். தொல்காப்பியம் பொருளதிகார அகத்திணையில் மூன்று வகையான பொருட்கள் பற்றிய குறிப்பு உள்ளது.*

***முதல் கரு உரிப்பொருள் என்ற மூன்றே***
***நுவலுங்காலை முறை சிறந்தனவே***
***(தொல்காப்பியம் - 949)***

*இவற்றுள் கருப்பொருள் எனப்படுவது*

***தெய்வம் உணாவே, மா, மரம், புள், பறை***
***செய்தி யாழின் பகுதியோடு தொகைஇ***
***அவ்வகை பிறவும் கருவென மொழிய***
***(தொல்காப்பியம் -964)***

*என்ற மேற்கூறிய நூற்பாவின் வழி அறியலாம். இங்கு உயிரியல் செய்திகளாக இடம் பெறுபவை ஐவகை நிலங்களிலும் காணப்படுகின்ற விலங்கு, பறவை, செடி கொடிகள், முதலியனவாகும். உலக உயிர்கள் அனைத்தையும் இருபெருந்தொகுதிகளாகப் பிரிக்கலாம்.*

*ஒரு வித்திலை இருவித்திலைத் தாவரம் முதுகெலும்பற்றவை முதுகெலும்புள்ளவை தாவர உலகில் ஆய்வுக்குரிய பொருளாக இடம் பெறுவன அவற்றின் வாழ்நிலையை ஒட்டிய அடிப்படையால் கீழ்கண்டவாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன. புதர், குற்றுச்செடி, செடி, மரம், கொடிகள் மட்டுமல்லாது தரையால் ஊர்வன மரத்தில் ஏறுவன என பல வகைகள் உள்ளன. ஔவையின் பாடல்களில் பயிர், காய், கனி, பூக்கள், செடி, கொடி, மரம் பற்றிய செய்திகள் நிறைந்து காணப்படுகின்றன.*

*வகைப்பாட்டின் விலங்குகளின் உலகம் அனைத்தும் நேரிடையாகவும் மறைமுகமாகவும் தாவர உலகினைச் சார்ந்துள்ளது. உலகில் உள்ள உயிர்கள் அனைத்திற்கும் உணவு என்பது மிகவும் அவசியமான ஒரு தேவையாகும். ஔவை தனது பாடல்களில் தானியங்கள் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.*

**தானியங்கள்**

***நெல்: இரண்டு பாடல்களில் நெல் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். அதியமான் நெடுமானஞ்சிக்குத் திறை செலுத்தாதவர்களை நோக்கி ஔவை அதியமானின் வெற்றியைப் பாராட்டி வீட்டு பிணிக் கதிர் நெல்லின் செம்மல்***

***மூதூர் நுமக்கு உரித்து ஆதல்***
***வேண்டின் சென்றவர்க்கு (புறநானூறு -97)***

என்ற பாடலில் பெரிய தாளையும் ஒன்றுடன் ஒன்று பின்னிக்கிடக்கும் கதிர்களையுடைய நெல்லையுடைய தலைமை சான்ற ஊர் உமக்கு வேண்டின் திறையை மறவாமல் செலுத்துக என அறிவுறுத்துவதாக அமைந்துள்ளது. மற்றொரு பாடலில்

***பகடுதரு செந்நெல் போரொடு நல்கி***
***(புறநானூறு - 390)***

என்ற தொடரின் வழி நெல் எனும் தானியத்தை சங்ககால மக்கள் பயன்படுத்தியுள்ளமையை அறிய முடிகின்றது.

***மூவுழக்கு திணைதந்தான் - சோழா கேள்***
***(தனி பாடல் - 52)***

என திணை குறித்து ஔவையார் தனது பாடலில் குறிப்பிட்டுள்ளார்.

***கரும்பு:*** கடலுக்கு அப்பால் உள்ள நாட்டில் உள்ள பெறுவதற்கு அரிய அமிழ்தம் போன்ற கரும்பை இந்நாட்டிற்கு கொண்டு வந்தவனின் வழியில் தோன்றியவனே என் ஔவை அதியமானின் மகனான பொருட்டெழினியைப் பார்த்துக் கூறுவதாக இச்செய்தி இடம்பெற்றுள்ளது.

***அரும்பெறல் அமிழ்தன்ன கரும்பு இவண் தந்தோன்...***
***(புறநானூறு - 392)***

மேலும் இதே பாடலில் வரகு, கொள் முதலிய தானிய வித்துக்கள் பற்றிய குறிப்பும் இடம் பெற்றுள்ளன.

***காய்:*** ஔவை பனைமரம் தளிர்க்கப் பாடிய தனிப்பாடல் ஒன்றில் பனங்காயான நுங்குபற்றிய செய்தியான,

***நுங்குக் கண்முற்றி அடிக்கண்கறுத்து***
***(தனிப்பாடல் - 69)***

காஞ்சிரங்காய், மாங்காய், வழுதுணங்காய் போன்ற காய்கள் குறித்து தனது பாடல்களில் குறிப்பிட்டுள்ளார்.

***பழம்:*** அதியமான் தன் வாழ்நாளைவிட தமிழை வளர்க்கும் ஔவையின் ஆயுளை நேசித்து தனக்கு அரிதாகக் கிடைத்த நெல்லிக்கனியை அன்புடன் ஈந்தான்.

***சிறியிலை நெல்லித் தீங்கனி குறியாது***
***(புறநானூறு - 91)***

புறநானூற்றில் நெல்லிக்கனி குறித்து பேசப்பட்டுள்ளது. பிரப்பம்பழம், ஈச்சங்கனி, பனம்பழம் குறித்து ஔவை தனிப்பாடலில் பாடியுள்ளார்.

***பூக்கள்:*** காந்தள் கைவிரல்கள் போன்ற தோற்றமுடைய காந்தள் மலர் பற்றிய செய்தியான மலர்ந்தகாந்தள் என்ற சொல்லை ஔவையார் கையாண்டுள்ளார்.

***மயிலின் கழுத்தைப் போன்ற சாயலுடைய இந்த காயா மலர்கள்,***
***புல்லின் காயாப் பூகெழு பெருஞ்சினை***
***(குறுந்தொகை -183)***
***குவளை நீர்வார் நிகர்மலர் கடுப்ப (அகம்-11)***
***நீர்சால யாத்த நிரையிதழ்க் குவளை (குறுந்-238)***
***விசும்பி விசைத்து எறிந்த கூதளம் (அகம்-273)***

இவை தவிர இன்னும் பலபூக்கள் பற்றிய செய்திகளைப் பாடியுள்ளார். அதிரல், ஆம்பல், இலவம், கொன்றை, வேங்கை, என ஔவையார் தனது பாடல்களில் பல வகையான பூக்கள் குறித்து பாடியிருக்கிறார்.

***மரங்கள்:*** ஔவையார் தனது பாடல்களில் ஏறத்தாழ முப்பதிற்கும் மேற்பட்ட மரங்கள் குறித்துப் பாடியுள்ளார். ஆல் (கு.15) இலவம் (அகம்-11) கரங்காலி (த.பா.95), கற்பகம், காயா, கொன்றை (கு.183) நெல்லி (அகம்-284,291), பனை (த.பா.86) பலா (புறம்-140) கூன்பலா (த.பா.51) வெட்சி (புறம்-100) வேங்கை (புறம்-100, 390) வேம்பு (த.பா. 46)

***கொடி:*** வள்ளிக்கொடி பற்றிய செய்தியை ஔவையார் தனது பாடல்களில் குறிப்பிட்டுள்ளார்.

***முறிந்த சிலம்பினெறிந்த வள்ளியின்***
***(நற்றிணை-295)***

என வருகிறது. முல்லைக்கொடிபடர தன் தேரினை ஈந்த பாரியின் மகளிர்க்கு மூவேந்தரையும் அழைத்து மணம் செய்து வைத்த ஔவை விலங்குகளையும் பற்றிப் பாடியுள்ளார்.

புள்ளினங்களை என இரு வகைப்படுத்தலாம். முன்னது ஒரு செல் உயிரி தொடங்கி மீனுக்கு முந்தைய குடும்பம் வரை இடம்பெறுகிறது. பின்னது மீனில் தொடங்கி நீந்துவன, நிலம்

*நீர்வாழ்வன, ஊர்வன, பறப்பன, பாலூட்டிகள் என மனிதன் வரையிலான வகைமைப்பாடு இதனுள் அடங்கும். நிலம்நீர் வாழ்வன குறித்த செய்திமட்டும் ஒளவைபாடலில் இடம்பெறவில்லை.*

*விலங்கு உலகம் முதுகெலும்பற்றவை, முதுகெலும்பு உள்ளவை என இருவகைப்படும். பாம்பினங்கள் ஊர்வன அனைத்தும் முதுகெலும்பற்றவை என்ற பாகுபாட்டினுள் அடங்கும். அரவுத்தலைப்பணிப்ப (நற்.129) பாம்பு(குறுந்.158) நாகத்தன்ன (புறம்.367) நீர்ப்பாம்பு உள்ளிட்ட பலவகை பாம்புகள் குறித்து இலக்கியங்கள் பேசுகின்றன.*

*பறப்பன உயிர்களான அன்னம், ஆந்தை, காக்கை, குருகு, குருவி, பசுங்கால் வெண்குருவி கொக்கு, கோட்டான், பருந்து, வான்கோழி என பலவகையான பறவைகள் இருந்ததை சங்கப் பாடல்களின் வழி அறிய முடிகின்றது.*

***பாலூட்டிகள்:*** *மனிதன் தவிர்த்துப் பிற பாலூட்டி விலங்குகள் மற்றும் பாலூட்டிப் பறவையான வௌவால் பற்றியும் சங்கப் பாடல்களில் குறிப்பிட்டுள்ளார். ஆட்டுக்குட்டி (புறம்.286) இரலை (புறம்.90) எருது (புறம்.102) எருமை (த.பா.59,78,95) கழுதை (புறம்.392, த.பா.59) குதிரை (த.பா.44,78) குரங்கு (கு.29, த.பா.59) நாய் (த.பா.102) நீர் நாய் (நற்.390) பரி(த.பா.78) பிணை (குறு.183), புலி, பெண்புலி, புலிக்குட்டி (அகம்.147) பூனை (த.பா.49) மான் (கு.183) என விலங்குகளின் பட்டியல் நீள்கிறது. அதுமட்டுமல்லாமல் யானையை பல விதங்களில் ஒளவை குறிப்பிடுகிறார். களிறு (புறம்.97,98,103) கைமான் (த.பா.78,138) யானை (கரி) (த.பா.78,138, வரை போல் யானை (குறுந்.388) வரிவயம் பொருதவயக் களிறு (புறம்.100) பெருங்களிறு (புறம்.140) பொருகளிற்றடி வழி (புறம்.392) மரக்களிறு (புறம்.103) அன்னல்யானை (புறம்.93) இளங்களிற்றியானை (புறம்.290) ஆகியனவாகும்.*

## முடிவுரை

*ஒளவையாரின் படைப்புகளில் இடம் பெற்றுள்ள தாவர, விலங்குகள் உள்ளிட்ட உயிர் அறிவியல் செய்திகள் அனைத்தும் தொகுத்துத்தரப்பட்டுள்ளன. பக்க வரையறை கருதி ஓரளவு மேலோட்டமாக, தாவர, விலங்குகளின் பெயர் பட்டியலிடப்பட்டுள்ளன. குறிஞ்சிப்பாட்டில் பூக்களின் பெயர் அணிவகுப்பைக் கண்டு வியப்பவர்கள் ஒளவையின் தாவர, விலங்கியல் அறிவையும் எண்ணி வியக்கக் கூடும். சான்றாக யானை பற்றிய அவர் சொல்லாய்வு அவர்தம் நுண்மாண் நுழைபுலத்தை எடுத்தியம்புகிறது.*

## துணைநூற் பட்டியல்


1. *சாமிநாதையர். உ.வே. ப.ஆ பத்துப்பாட்டு, உ.வே.சா.நூல் நிலையம், சென்னை, 1950*
2. *சாமிநாதையர். உ.வே. ப.ஆ சிலப்பதிகாரம், உ.வே.சா. நூல் நிலையம் சென்னை, 2008.*
3. *சாமிநாதையர், உ.வே. ப.ஆ குறுந்தொகை, உ.வே.சா. நூல்நிலையம், சென்னை, 2009.*
4. *சுப்பிரமணியன் ச.வே. ப.ஆ பத்துப்பாட்டு மூலம், மணிவாசகர் புத்தகநிலையம், 2006.*
5. *சுப்பிரமணியன் ச.வே. ப.ஆ சங்க இலக்கியம் மூலம் முழுவதும், மணிவாசகர் புத்தகநிலையம், 2011.*
6. *துரைசாமிபிள்ளை, ஒளவை. சு. உ.ஆ புறநானூறு 1-200 கழகவெளியீடு, சென்னை, 1947.*
7. *துரைசாமிப்பிள்ளை. ஒளவை. சு. உ.ஆ புறநானூறு 201-400 கழக வெளியீடு, சென்னை, 1951*
8. *பலராமன். க, பழந்தமிழில் அறிவியல், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை. 2009*
9. *மணவழகன் ஆ, பழந்தமிழர் தொழில்நுட்பம், அய்யனார் பதிப்பகம், 2010*
10. *மாத்தளை சோமு, வியக்க வைக்கும் தமிழர்அறிவியல், உதகம், திருச்சி, 2005*
11. *வேங்கடசாமி, மயிலை. சீனி. பழங்காலத் தமிழர் வாணிகம்,. 2011*